



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 271 | 25.03.2026 | WEDNESDAY | PANGUNI: 11 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 271 | 25.03.2026 | புதன்கிழமை | பங்குனி : 11 | விலை : ரூ.5/–


## மேற்கு ஆசிய போர் பதற்றத்தால் நெருக்கடி: அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு

# "மத்திய அரசு அழைப்பு"

புது டெல்லி: மார்ச்.25-

மேற்கு ஆசியாவில் நிலவும் போர் பதற்றத்தின் தாக்கத்தால் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து விவாதிக்க, இன்று (மார்ச் 25) மாலை 5 மணிக்கு அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

உலகளாவிய மற்றும் பிராந்திய அளவில் பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், இந்தியாவின் தற்காப்புத் தயார் நிலையை ஆய்வு செய்வதற்காக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் ஆய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் முப்படைத் தளபதி ஜெனரல் அனில் சவுகான், விமானப் படைத் தளபதி ஏர் சீஃப் மார்ஷல் அமர் ப்ரீத் சிங், ஜெனரல் உபேந்திர திவேதி, கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி, டிஆர்டிஓ அமைப்பின் தலைவர் சமீர் காமத் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மேற்கு ஆசியாவில் நடைபெற்று வரும் மோதல் நான்காவது வாரமாக நீடிக்கிறது. இதனால் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியுள்ளதால், எரிபொருள் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் மோடி, "மேற்கு ஆசியாவின் தற்போதைய நிலைமை மிகுந்த கவலையளிக்கிறது. 3 வாரங்களுக்கும் மேலாக பிரச்சினை நீடிக்கிறது. இதனால் சர்வதேச பொருளாதாரம் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. தற்போதைய போரால் நமது நாட்டில் பல்வேறு சவால்கள் எழுந்துள்ளன.



போரின் எதிர்விளைவாக உலகின் மிக முக்கிய கடல் வழி போக்குவரத்து (ஹார்முஸ் ஜலசந்தி) முடங்கியிருக்கிறது. இதனால் கச்சா எண்ணெய், எரிவாயு போக்குவரத்து மோசமாகப் பாதிக்கப்பட்டு உள்ளது. வளைகுடா நாடுகளில் சுமார் ஒரு கோடி இந்தியர்கள் வசிக்கின்றனர். அவர்களின் பாதுகாப்பில் மத்திய அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. பல்வேறு நாடுகளின் சரக்கு கப்பல்களில் இந்தியர்கள் பெரும்பான்மையாக பணியாற்றி வருகின்றனர்.

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இந்தியாவுக்கு கச்சா எண்ணெய், எரிவாயு, உரங்கள் கொண்டு வரும் சரக்கு கப்பல் போக்குவரத்து முடங்கியிருக்கிறது.

இப்போதைய இக்கட்டான காலத்திலும் பெட்ரோல், டீசல், காஸ் விநியோகம் சீராக நடைபெற்று வருகிறது. இந்தியாவின் சமையல் காஸ் தேவையில் 60 சதவீதம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. உள்நாட்டில் சமையல் காஸ் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு உள்ளது. நாடு முழுவதும் பெட்ரோல், டீசல், சமையல் காஸ், உரம் தட்டுப்பாடு இன்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.

கச்சா எண்ணெய், எல்என்ஜி, எல்பிஜி ஆகியவை முன்பு 27 நாடுகளில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது 41 நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. நமது நாட்டில் 53 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் இருப்பு உள்ளது. இதனை 65 மெட்ரிக் டன்னாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என்று பேசியிருந்தார்.

இந்தப் பின்னணியில், அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்திருப்பது கவனிக்கத்தக்கது.

முன்னதாக, பிப்ரவரி 28 அன்று, அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து நடத்திய ராணுவத் தாக்குதலில், ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்டார்.

இதற்குப் பதிலடியாக, ஈரான் வளைகுடா நாடுகளின் பல பகுதிகளில் உள்ள இஸ்ரேல் மற்றும் அமெரிக்க தளங்களை தாக்கி வருகிறது. இதனால் கடல் மற்றும் விமானப் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், எரிபொருள் போக்குவரத்து சிக்கலை சந்தித்துள்ளது கவனிக்கத்தக்கது.

## மாம்பழம் சின்னம் விவகாரம்: ராமதாஸ் தரப்பு உரிமையியல் நீதிமன்றத்தில் முறையீடு

சென்னை: மார்ச்.25-

பாமகவின் மாம்பழம் சின்னம் குறித்த வழக்கு தொடர்பாக உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு குறித்து நிறுவனர் ராமதாஸ் தரப்பு சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் முறையீடு.



மாம்பழம் சின்னம், பாமக பெயர் மற்றும் கொடி ஆகியவற்றை அன்புமணி பயன்படுத்த எதிர்ப்பு தெரிவித்து ராமதாஸ் தரப்பில் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

இந்நிலையில், பாமகவின் மாம்பழம் சின்னம் குறித்த வழக்கு தொடர்பாக உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு குறித்து நிறுவனர் ராமதாஸ் தரப்பு சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளது.

இதனை, மனுவாக தாக்கல் செய்தால் இன்று (மார்ச் 25) விசாரிப்பதாகவும் அதற்கு முன்னதாக மனுவின் நகலை அன்புமணி ராமதாஸ் தரப்புக்கு வழங்கவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## புதுச்சேரியின் 'பிக் மேட்ச்'! எம்.பியா? சி.எம்மா? தலைவர்களின் களம்... தட்டாஞ்சாவடி! ஒரு 'மெகா' மல்லுக்கட்டு!

புதுச்சேரி, மார்ச்.25



புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல் களம் இதுவரை கண்டிராத ஒரு உச்சகட்டப் பரபரப்பை எட்டியுள்ளது. தட்டாஞ்சாவடி தொகுதியில் போட்டியிடும் அகில இந்திய என்.ஆர். காங்கிரஸ் தலைவரும், புதுவை முதலமைச்சருமான ரங்கசாமி அவர்களை எதிர்த்து, மாநில காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வைத்திலிங்கம் களம் இறங்குகிறார்.

வரலாறு திரும்புகிறது: கடந்த 1996ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், அப்போதைய திமுக மாநில அமைப்பாளர் ஜானகிராமனை எதிர்த்து, அதிமுக மாநில அமைப்பாளர் எம்.டி.ஆர். ராமச்சந்திரன் நெல்லித்தோப்பு தொகுதியில் நேருக்கு நேர் மோதினார். சரியாக 30 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போது இரண்டு பிரதான கட்சிகளின் மாநிலத் தலைவர்கள் ஒரே தொகுதியில் நேரடியாக மோதுவது புதுச்சேரி அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

சபாஷ் சரியான போட்டி: முதல்வர் ரங்கசாமி தனது கோட்டையான தட்டாஞ்சாவடியில் மீண்டும் பலத்தை நிரூபிக்கத் தயாராகி வருகிறார். வைத்திலிங்கம் எம்.பி: நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற செல்வாக்கைத் தட்டாஞ்சாவடியில் அறுவடை செய்யத் திட்டமிட்டுள்ளார்.

இந்த நேரடி மோதலால் தட்டாஞ்சாவடி தொகுதி இப்போது 'ஸ்டார்' தொகுதியாக மாறியுள்ளது. 30 ஆண்டுகளுக்குப் பின் அரங்கேறும் இந்தத் தலைவர்களின் மல்லுக்கட்டில் வெற்றி யாருக்கு என்பதை அறிய ஒட்டுமொத்தப் புதுச்சேரியும் ஆவலுடன் காத்திருக்கிறது.

## எரிபொருள் தட்டுப்பாடு இல்லை: வதந்திகளை நம்பி பீதி வேண்டாம் மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சகம்

புதுடெல்லி, மார்ச்.25-

மேற்காசிய போர் காரணமாக ஈரான் ஹார்முஸ் ஜலசந்தியை முடக்கியதால் 28 இந்திய சரக்கு கப்பல்கள் அந்த வழித்தடத்தில் பயணிக்க முடியாமல் சிக்கின.

இவற்றில் 24 கப்பல்கள் அந்த நீரிணையின் மேற்கு பகுதியிலும் 4 கப்பல்கள் கிழக்கு பகுதியிலும் சிக்கி இருந்தன. பேச்சுவார்த்தையின் பலனாக 92.712 டன்னுடன் ஷிவாலிக், மற்றும் நந்தாதேவி ஆகிய இரு கப்பல்கள் முறையே கடந்த 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில் குஜராத் வந்தடைந்தன.

ஜக் லாட்கி என்ற கப்பல் 80,800 டன் கச்சா எண்ணையுடன் குஜராத்தின் முந்த்ரா துறைமுகத்தை 18ம் தேதி வந்தடைந்தது. ஓமனில் இருந்து ஆப்ரிக்காவுக்கு பெட்ரோல் கொண்டு செல்லும் ஜக் பிரகாஷ் என்ற கப்பல் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து தான்சானியாவை நோக்கி வந்து கொண்டு இருக்கிறது. மேலும் ஜக்வசந்த் பைன்கேஸ் எல்.ஜி.பி கப்ப இந்தியாவை நோக்கி வந்து கொண்டிருக்கிறது.

இந்தநிலையில், குஜராத்தில் சில பெட்ரோல் பங்குகளில் திடீரென பெட்ரோல் தட்டுப்பாடு ஏற்பட்டதாக கூறப்பட்டது. அகமதாபாத்தில் உள்ள பல பெட்ரோல் பங்குகளில் பெட்ரோல் நிரப்புவதற்கு வாடிக்கையாளர்கள் அலைமோதினர்.

அரசு மற்றும் எண்ணெய் நிறுவனங்கள் போதுமான அளவு பெட்ரோல் கையிருப்பு உள்ளதாக உறுதி அளித்தாலும், பெட்ரோல் பங்குக்களில் இடங்களில் நீண்ட வரிசைகள் காணப்பட்டன. இதற்கு முக்கிய காரணம், டீலர்கள் பணம் செலுத்துவதில் ஏற்பட்ட தற்காலிக சிக்கல்கள்தான் என தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், எரிபொருள் பற்றாக்குறை குறித்த வதந்திகளை நம்பி பீதியடைய வேண்டாம் என மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சகம் கூறியுள்ளது.

இது தொடர்பாக மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சகம் வெளியிட்ட தகவலின்படி,

தற்போது நிலவும் புவிசார் அரசியல் சூழ்நிலை காரணமாக எல்பிஜி விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. எல்பிஜி விநியோக மையங்களில் தட்டுப்பாடு எதுவும் ஏற்படவில்லை, ஏராளமான சரக்குகள் கையிருப்பில் உள்ளன.

நேற்று, சிலர் பீதியுடன் முன்பதிவு செய்ததையும் நாங்கள் கவனித்தோம். ஆனால் விநியோகம் சாதாரணமாகவே இருந்தது. பெட்ரோல் மற்றும் டீசல் போதுமான அளவில் உள்ளன.

பிஎன்ஜி விநியோகம் 100% உள்நாட்டு நுகர்வோருக்கானது, அனைத்து உள்நாட்டு நுகர்வோருக்கும் எல்பிஜி சிலிண்டர்களும் வழங்கப்படுகின்றன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.























■ கொண்டலாம்பட்டி மண்டல அலுவலகத்தில் 2026 சட்டமன்ற பொதுத்தேர்தல் வாக்காளர்கள் ஜனநாயக முறைப்படி சுதந்திரமாக வாக்களிப்பது வாக்காளர்களின் உரிமை தேர்தல் விழிப்புணர்வு ஒலிபெருக்கி வாகனத்தை 90 தெற்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர். மா.இளங்கோவன், ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மகளிர் திட்ட இயக்குநர் மா.வாணி ஈஸ்வரி, ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். உடன் உதவி தேர்தல் நடத்தும் அலுவலரும் உதவி ஆணையாளர் தமிழ்வேந்தன் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில், ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் ரு 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) மற்றும் வாக்களித்ததை உறுதி செய்யும் ஒப்புகைச் சீட்டுக் கருவி (VVPAT) ஆகியவற்றை சட்டமன்ற தொகுதி வாரியாக பிரித்து அனுப்பும் பணி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

# திண்டுக்கல் தேனி 11ம் நமதே! பா.ஜ.க. காலூன்ற முடியாது Deputy சிவி உதயநிதி ஸ்டாலின் முழக்கம்



சின்னாளபட்டி, மார்ச். 25-

திண்டுக்கல் தேனி மாவட்ட திமுக இளைஞரணி நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் பி.எஸ்.என்.ஏ. மஹாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தலைமை தாங்கினார். உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தேனி எம்.பி. தங்கதமிழ்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் கம்பம் இராமகிருஷ்ணன், ஆண்டிப்பட்டி மஹாராஜன், பெரியகுளம் சரவணன், மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளார் வெ.ஜெயன், வேடசந்தூர் காந்திராஜன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட பொருளாளர் சாணார்பட்டி விஜயன் திண்டுக்கல் மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், துணை மேயர் ராஜப்பா ஆகியோர் முன்னி;லை வகித்தனர். பழனி சட்ட மன்ற திமுக உறுப்பினரும், கிழக்கு மாவட்ட திமுக செயலாளருமான ஐ.பி. செந்தில்குமார் வரவேற்று பேசினார்.

கூட்டத்தில் திமுக மாநில இளைஞரணி செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசும்போது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு திமுக அணிகளில் பிடித்த அணி இளைஞரணி ஆகும். காரணம் தேர்தல் பணி மட்டுமின்றி கழக அரசின் நலத்திட்டங்களை எடுத்துரைப்பதில் இளைஞர் அணி முதலிடம் பிடிக்கும். கடந்த 2021 சட்டமன்ற தேர்தலின்போது திமுக சார்பாக வாக்குறுதிளாக அறிவித்த அனைத்து நலத்திட்டங்களையும் நமது தமிழக முதல்வர் சிறப்பாக செயல்படுத்தியுள்ளார். திண்டுக்கல் தேனி மாவட்டத்தில் நூற்றுக் கணக்கான கோடிகளுக்கு நலத்திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம். இரண்டு மாவட்டங்களையும் சேர்த்து 11 தொகுதிகளிலும் இம்முறை திமுக கூட்டணி மாபெறும் வெற்றிபெறும்.

எடப்பாடி பழனிச்சாமி தனது கட்சி அலுவலகத்தையே மறந்துவிட்டு டெல்லிக்கு படையெடுக்கிறார். ஆனால் நமது கழகத்தலைவர் தினசரி கட்சி அலுவலகத்திற்கு வந்து தொண்டர்களையும், நிர்வாகிகளையும் சந்தித்து ஆலோசனை வழங்குகிறார். பீஹாரில் எப்படி நிதிஸ்குமாரை பா.ஜ.க. எப்படி வளைத்து விட்டதோ, அதுபோல எடப்பாடி பழனிச்சாமியையும், அதிமுகவையும் பா.ஜ.க. முழுமையாக கபளீகரம் செய்துவிடும்.

இப்போது நடக்கும் தேர்தல் டெல்லிக்கும், தமிகத்திற்கும் நடைபெறும் தேர்தல் ஆகும். தமிழக வளர்ச்சிக்காக தர வேண்டிய நலத்திட்டங்களையும், நிதியையும் நோ என சொல்லி மறுக்கும் பிரதமர் மோடிக்கு 2026 சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதிகளிலும் நோ என சொல்லி விரட்டியடிப்போம். திமுகவின்; கடைசி தொண்டன் இருக்கும்வரை தமிழகத்தில் பா.ஜ.க. நேரடியாகவோ, மறைமுகமாகவோ காலூன்ற முடியாது. சட்டமன்ற தேர்தலுக்கு இன்றும் 29 நாட்கள்தான் உள்ளன. இளைஞரணியினர் பம்பரம்போல் சுழன்று தமிழக அரசு தமிழகத்தில் செயல்படுத்திய அனைதது நலத்திட்;டங்களையும் பொதுமக்கள் மத்தியில் கொண்டு சேர்க்க வேண்டும் என்றார்.

கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் வழக்கறி;ஞர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், மார்கிரேட்மேரி, பிலால் உசேன், பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரபாகரன், .இளைஞரணி அமைப்பாளர் ம.கணேசன், ஒன்றிய செயலாளர்கள் ப.க.சிவகுருசாமி, பாறைப்பட்டி ராமன், பிள்ளையார்நத்தம் முருகேசன், கே.சி.பட்டி அய்யப்பன், ரெட்டியார்சத்திரம் மணி, இன்பராஜ், நிலக்கோட்டை மணிகண்டன், கரிகாலபாண்டியன், சௌந்திரபாண்டியன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் குமரேசன், துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், மணி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் வாஞ்சிநாதன், கணேசன், பேரூர் கழக செயலாளர்கள் தங்கராஜ், அருண்குமார், இளங்கோவன், நாகப்பன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் ராஜகணேசன், அருளானந்தம், ரமேஸ், முத்துகிருஷ்ணன், மாணவரணி அமைப்பாளர்கள் அரவிந்தன், ரெட்டியார்சத்திரம் செல்வன், உட்பட திமுக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# இந்துக்கள், சீக்கியர்கள், பவுத்தர்கள் மட்டுமே பட்டியல் சமூகத்தினராக இருக்க முடியும்

## உச்ச நீதிமன்றம்



புதுடெல்லி, மார்ச், 25-

இந்துக்கள், சீக்கியர்கள், பவுத்தர்கள் மட்டுமே பட்டியல் சமூகத்தினரான இருக்க முடியும் என்று ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை, உச்ச நீதிமன்ற அமர்வு உறுதி செய்துள்ளது.

சாதி ரீதியாக பாகுபாடு காட்டிய, துன்புறுத்திய நபர்கள் மீது எஸ்சி எஸ்டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவிடக் கோரி கிறிஸ்தவ மதத்துக்கு மாறிய பாதிரியார் ஒருவர் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.கே.மிஷ்ரா, நீதிபதி மன்மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வு இன்று தனது தீர்ப்பை அளித்தது.

அந்த தீர்ப்பில், ''இந்த வழக்கில் மனுதாரர் கிறிஸ்தவத்தில் இருந்து தனது உண்மையான மதத்துக்கு மீண்டும் மதம் மாறியதாகவோ அல்லது மடிகா சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவோ வாதிடவில்லை. மேல்முறையீட்டாளர் தொடர்ந்து கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றி கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக கிராமத்தில் உள்ள வீடுகளில் ஞாயிறுதோறும் பிரார்த்தனைகளை நடத்தி ஒரு போதகராகச் செயல்பட்டு வருகிறார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

குற்றம்சாட்டப்பட்ட சம்பவம் நடந்த நேரத்தில் அவர் அந்த வீட்டில் பிரார்த்தனைக் கூட்டங்களை நடத்திக் கொண்டிருந்தார் என்பதும் ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது. இந்த உண்மைகள், சம்பவம் நடந்த தேதியில் அவர் ஒரு கிறிஸ்தவராகவே இருந்தார் என்பதில் எந்த சந்தேகத்துக்கும் இடமளிக்கவில்லை.

இந்து, சீக்கிய, பவுத்த மதங்களைத் தவிர வேறு மதத்தைப் பின்பற்றும் எந்த ஒரு நபரும் பட்டியல் சமூகத்தை சேர்ந்தவராகக் கருதப்பட மாட்டார். வேறு ஏதேனும் ஒரு மதத்துக்கு மாறுவது பட்டியல் சமூக அடையாளத்தை இழக்க வழிவகுக்கும். வேறு மதத்துக்கு மாறிய ஒரு நபர், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு கோர தகுதியற்றவர்'' என உத்தரவிட்டனர்.

வழக்கின் பின்னணி:

ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த சிந்தடா ஆனந்த் என்ற பாதிரியார், தனது கிராமத்தில் ஞாயிறுதோறும் பிரார்த்தனை கூட்டங்களை நடத்தி வந்துள்ளார். அக்கலா ராமி ரெட்டி உள்ளிட்ட சில நபர்கள் தன்னை தாக்கியதாகவும், தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அவர்கள் மீது எஸ்சி எஸ்டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரி ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

சிந்தடா ஆனந்த்தின் மனுவை விசாரித்த ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்ற நீதிபதி என்.ஹரிநாத், ''புகார்தாரர் கிறிஸ்தவ மதத்துக்கு மாறியதன் மூலம் அவர் தனது பட்டியல் சமூக அடையாளத்தை இழந்துவிட்டார். எனவே, எஸ்சி எஸ்டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பைக் கோர அவருக்கு உரிமை இல்லை'' என உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவை எதிர்த்து சிந்தடா ஆனந்த், உச்ச நீதிம ன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்திருந்தார். அவரது மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றத் தீர்ப்பை உறுதிப்படுத்தி உத்தரவிட்டுள்ளது.



■ தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு மதுரை கோ.புதூர் அல்அமீன் மேல்நிலைப்பள்ளியிலுள்ள வாக்குச்சாவடிகளை மாவட்டத் தேர்தல் அதிகாரியும், ஏடிஜிபியுமான அஸ்வதி நேரில் ஆய்வு செய்தார். உடன் அண்ணாநகர் சரக காவல் உதவி ஆணையர் சிவசக்தி, மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர் ஷேக்நபி உள்ளனர்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026 முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில், திருப்பூர் மாநகராட்சி எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் தேர்தலில் முதல் முறை வாக்களிக்கும் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (பதிவுகள் சரிபார்ப்பு) மயில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, மாவட்ட சமூக நல அலுவலர் ரஞ்சிதாதேவி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செ.கு.சதீஸ்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் உதவி இயக்குநர் (பயிற்சி) செல்வி. ஹர்ஷா ஆகியோர் உள்ளனர்.



■ ஈரோடு சர்வதேச மனித உரிமைகள் சமூக நீதி சபை பெண்களுக்கான உலக மகளிர் பேரவை மற்றும் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டியின் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் மற்றும் மாநில தலைவர் ஆர் தட்ராஜ் ஆகியோரின் பரிந்துரையின் பேரில் ஙிறி அக்ரகாரம் பகுதியில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் உதவி மின் பொறியாளர் வி ஸி சரண்யா அவர்களுக்கு நீண்டகால பல்வேறு சேவைகளை பாராட்டி கௌரவிக்கும் விதமாக கீசிகீஸி இன் சிங்க பெண்ணே விருது டாக்டர் நி.தங்கவேல் அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டது உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# மேலும் இரு இந்திய கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையை கடந்தன

டெல்லி, மார்ச். 25-

மேலும் இரு இந்திய கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையை கடந்தன. ஜக் வசந்த், பைன் கேஸ் ஆகிய இரு இந்திய கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையை கடந்தன. 92,612 மெட்ரிக் டன் திரவ வாயுவை சுமந்து கொண்டு இரு கப்பல்களும் இந்தியா நோக்கி வருகின்றன. வரும் 28, 29ஆம் தேதிகளில் கப்பல்கள் அடுத்தடுத்து இந்தியாவுக்கு வர இருக்கின்றன

# கண்டலேறுவில் திறக்கப்பட்ட கிருஷ்ணா நீர் ஊத்துக்கோட்டை ஜீரோ பாயிண்ட் வந்தது


ஊத்துக்கோட்டை, மார்ச். 25-

ஆந்திரா மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா தண்ணீரால் தமிழக எல்லையான ஜீரோ பாயிண்டிற்கு வந்தது. ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து கடந்தாண்டு ஜூலை 1ம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட்டது. இதில் கடந்த செப்டம்பர் 15ம் தேதி வரை 2.50 டிஎம்சி தண்ணீர் வழங்கியுள்ள. மீதமுள்ள தண்ணீரை அக்டோபர் மாதத்திற்குள் ஆந்திர அரசு வழங்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த அக்டோபர் 27ம் தேதி இரவு 9 மணிக்கு திடீரென கண்டலேறுவில் தண்ணீர் நிறுத்தப்பட்டது. இந்த தண்ணீர் தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ பாயிண்டிற்கு 3.8 டி.எம்.சி மட்டுமே கிடைத்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.இந்நிலையில் ஜனவரி மாதம் வழங்க வேண்டிய கிருஷ்ணா தண்ணீரை பிப்ரவரி 23ம் தேதி வினாடிக்கு 200 கனஅடி வீதமும், மறுநாள் காலை 500 கன அடியாகவும் திறக்கப்பட்டது. பின்னர் வினாடிக்கு 2400 கன அடியாக உயர்த்தி திறக்கப்பட்டுள்ளது.

இந்த தண்ணீர் தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ பாயிண்டிற்கு கடந்த மாதம் 25ம் தேதி இரவு வந்தது. இந்த தண்ணீர் மறுநாள் பூண்டியில் உள்ள சத்தியமூர்த்தி நீர்த்தேக்கத்தை அடைந்தது. தற்போது தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ பாயிண்டிற்கு வினாடிக்கு 420 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. தண்ணீர் திறக்கப்பட்ட ஒரு மாதத்தில் தமிழகத்திற்கு 1 டிஎம்சி தண்ணீர் கிடைத்துள்ளது.

# 4 டிரான்ஸ்பார்மர்களைத் தூக்கிய கும்பல் சிக்கியது! திசையன்விளை தனிப்படை போலீசாரின் அதிரடி வேட்டை



திசையன்விளை மார்ச். 25-

நெல்லை மாவட்டம் இட்டமொழி மற்றும் மிட்டார்தார் குளம் சுற்றுவட்டாரப் பகுதிகளில், கடந்த சில நாட்களாக நள்ளிரவு நேரங்களில் நான்கு மின் டிரான்ஸ்பார்மர்கள் மர்ம நபர்களால் திருடப்பட்டன. இதனால் அப்பகுதிகளில் மின் விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, பொதுமக்கள் மிகுந்த அவதிக்குள்ளாகினர். இது குறித்து மின்வாரிய அதிகாரிகள் அளித்த புகாரைத் தொடர்ந்து, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் தனிப்படை அமைக்கப்பட்டது.

*தனிப்படையின் சாதுர்யமான நடவடிக்கை:*

வள்ளியூர் டி.எஸ்.பி வெங்கடேஷ் மேற்பார்வையில், ஆய்வாளர் எழில் சுரேஷ், உதவி ஆய்வாளர்கள் அபினேஷ், அன்றோ பிரதீப், ஏட்டு ராஜகோபால், மற்றும் காவலர் சங்கர் பெருமாள் ஆகியோர் அடங்கிய தனிப்படை தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கியது. அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி கேமரா காட்சிகளை ஆய்வு செய்ததில், சந்தேகத்திற்கிடமான வாகன நடமாட்டம் கண்டறியப்பட்டது.

*இரும்பு கடையில் சுற்றிவளைப்பு:*

விசாரணையின் அடுத்த கட்டமாக, திருச்செந்தூர் பகுதியில் உள்ள பழைய இரும்பு கடைகளில் தனிப்படையினர் சோதனை நடத்தினர். அப்போது ஒரு கடையில் திருடப்பட்ட நான்கு டிரான்ஸ்பார்மர்களும் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, அவை மீட்கப்பட்டன.

*கைது செய்யப்பட்டவர்கள் விவரம்:*

அந்தோணி ராபர்ட் (35) இவரிடம் சொந்தமாக டிப்பர் லாரி உள்ளது. பாஸ்கர் (37), ஆத்தி செல்வன் (32), கண்ணன் (42) லாரி டிரைவர் திருட்டுச் சம்பவத்தில் தொடர்புடைய காயாமொழி பகுதியைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டனர்:

*பறிமுதல் மற்றும் விசாரணை:*

திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட டிப்பர் லாரி மற்றும் இதர வாகனங்களை போலீசார் பறிமுதல் செய்தனர். கைதான அந்தோணி ராபர்ட் தனது வாகனங்களை வைத்தே டிரான்ஸ்பார்மர்களைக் கடத்தியது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்குப் பின்னால் பெரிய கும்பல் ஏதேனும் உள்ளதா? அல்லது வேறு மாவட்டங்களில் இது போன்ற கைவரிசையில் ஈடுபட்டுள்ளனரா? என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இலவச ஃபிரிட்ஜ், குடும்பத்துக்கு ரூ.10,000 அதிமுக தேர்தல் அறிக்கை 2026 முக்கிய அம்சங்கள்



சென்னை, மார்ச். 25-

'ஒவ்வொரு குடும்பத்துக்கும் இலவச ஃப்ரிட்ஜ் வழங்கப்படும்' என்பது உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகள் அடங்கிய அதிமுகவின் தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டார்.

சென்னை அதிமுக தலைமையகத்தில் பழனிசாமி வெளியிட்ட அதிமுக தேர்தல் அறிக்கை 2026ல் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள்:

› மகளிருக்கு மாதம் 2000 ரூபாய் வழங்கப்படும்.

› நகரப் பேருந்துகளில் ஆண்களும் இலவசமாக பயணம் செய்யலாம்.

› குடும்ப அட்டைதாரர்களுக்கு ஆண்டுக்கு 3 சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும்.

› பெண்கள் இரு சக்கர வாகனம் வாங்க ரூ.25,000 மானியமாக வழங்கப்படும்.

› குடும்ப அட்டைக்கு ஒரு கிலோ பருப்பு, ஒரு லிட்டர் எண்ணெய் வழங்கப்படும்.

› ஒவ்வொரு குடும்பத்துக்கும் விலையில்லா ஃபிரிட்ஜ் வழங்கப்படும்.

› முதியோர் உதவித் தொகை ரூ.2000 ஆக உயர்த்தப்படும்.

› தமிழ்நாட்டில் அனைத்து குடும்பங்களுக்கும் ரூ.10,000 நிதியுதவி வழங்கப்படும்.

› மாணவர்களுக்கான கல்விக் கடனை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பன உள்ளிட்ட வாக்குறுதிகள் இடம்பெற்றுள்ளன.

அதிமுகவின் தேர்தல் அறிக்கையில் மொத்தம் 297 அறிவிப்புகள் அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளதாகவும் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

# அறிவாலய அழுக்கு மணிமகுடம் மீதான மற்றொரு கரும்புள்ளி" நயினார் நாகேந்திரன்



சென்னை, மார்ச். 25-

"தமது சொந்தக் கட்சிக்காரர்களிடம் இருந்து பெண்களைப் பாதுகாக்க முடியாத முதல்வர், மற்ற குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தி தமிழகத்தின் சட்டம் ஒழுங்கை எப்படி சீராக்குவார்?" என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "சென்னை திருமங்கலத்தில் 12 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாகத் திமுக வழக்கறிஞர் பிரிவு பகுதி அமைப்பாளரான பரத் என்பவர் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பது, அறிவாலயத்தின் அழுக்கு மணிமகுடத்தின் மீது பதிக்கப்பட்ட மற்றுமொரு கரும்புள்ளி.

பாலியல் குற்றவாளிகள், போதைப்பொருள் கடத்தல் மன்னர்களை எல்லாம் கட்சி நிர்வாகிகளாக அமர்த்தி அழகு பார்க்கும் கேவலப்பட்ட ஒரே கட்சி திமுகதான் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

ஆட்சி அதிகாரம் கையில் இருக்கும் மமதையில் தான்தோன்றித்தனமாகத் திரியும் தமது சொந்தக் கட்சிக்காரர்களிடம் இருந்து பெண்களைப் பாதுகாக்க முடியாத முதல்வர், மற்ற குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தி தமிழகத்தின் சட்டம் ஒழுங்கை எப்படி சீராக்குவார்?

மேடைக்கு மேடை பெண்களைக் கேவலமாகப் பேசுபவர்களை நட்சத்திரப் பேச்சாளர்களாகவும், அதிகாரமிக்க அமைச்சர்களாகவும் கொண்டாடும் திமுக, தமிழகத்தில் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நம் பெண்கள் நிம்மதியாக வெளியே தலைகாட்ட முடியுமா?

குழந்தைகள் முதல் முதியவர்கள் வரையுள்ள அனைத்துப் பெண்களையும் கொஞ்சம் கூட ஈவு இரக்கமின்றி, பாலியல் ரீதியாக வேட்டையாடும் மிருகங்களுக்குத் தீனி போட்டு வளர்த்துக் கொண்டிருக்கும் திமுக எனும் தீயசக்தியை வேரோடு அழித்து, சுவடு தெரியாமல் புதைக்கும் வரை தமிழகப் பெண்கள் ஓயமாட்டார்கள்.

மீண்டும் ஆட்சியைப் பிடிக்கலாம், இஷ்டம்போல பெண்களை வதைக்கலாம் என்ற கனவில் மிதக்கும் திமுக உடன்பிறப்புகளின் பேராசைக்கு இன்னும் சில வாரங்களில் முடிவு கட்டப்படும்!" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# 17 மாநில உயர் அதிகாரிகளுடன் தேர்தல் ஆணையம் ஆலோசனை




புதுடெல்லி, மார்ச். 25-

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் மாநிலங்கள், யூனியன் பிரதேசம் மற்றும் அவற்றை ஒட்டிய மாநிலங்களின் உயர் அதிகாரிகள் குழுவினருடன் தேர்தல் ஆணையம் இன்று ஆலோசனை மேற்கொண்டது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நான்கு மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசம் மற்றும் அதன் எல்லைகளில் அமைந்துள்ள 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலாளர்கள், தலைமைத் தேர்தல் அதிகாரிகள், காவல்துறை தலைவர்கள் மற்றும் உயரதிகாரிகளுடன் தேர்தல் ஆணையம் இன்று ஆய்வுக்கூட்டம் நடத்தியது.

அப்போது, வன்முறையில்லாத, மிரட்டல் இல்லாத, தூண்டுதல் இல்லாத தேர்தல்களை உறுதி செய்யுமாறும், ஒருங்கிணைப்பை மேம்படுத்துமாறும் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டது.

அசாம், கேரளா, தமிழ்நாடு, மேற்கு வங்கம், புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் ஆணையர்கள் எஸ் எஸ் சாந்து, விவேக் ஜோஷி ஆகியோருடன் இணைந்து தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் வாக்குப்பதிவுக்கான தயார்நிலை, சட்டம், ஒழுங்கு நிலைமை சட்டவிரோத ரொக்கம், மதுபானம், போதைப்பொருள், ஆயுதங்கள் ஆகியவற்றை கைப்பற்றியது குறித்தும் மாநிலங்களுக்கு இடையேயான எல்லைச் சாவடிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

தேர்தல் நடைபெறும் மாநிலங்கள், யூனியன் பிரதேசம் மற்றும் அதன் அண்டை மாநிலங்களின் எல்லைச் சாவடிகளில் தீவிரக் கண்காணிப்பை உறுதி செய்யுமாறு அமலாக்கத்துறை இயக்குநரகம், வருவாய்ப் புலனாய்வு இயக்குநரகம், இந்திய ரிசர்வ் வங்கி, மத்திய ரிசர்வ் காவல் படை, மத்திய தொழிலக பாதுகாப்புப் படை, எல்லைப்பாதுகாப்புப் படை, ரயில்வே பாதுகாப்புப்படை, அஞ்சல் சேவை, இந்தியக் கடலோரக் காவல்படை, அசாம் ரைஃபிள்ஸ் உள்ளிட்ட முகமைகளின் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டனர்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூலித் தொழிலாளி கொலை வழக்கில் அதிமுக கவுன்சிலருக்கு ஆயுள் தண்டனை

திருவண்ணாமலை, மார்ச். 25-

கூலித் தொழிலாளி கொலை வழக்கில் வேட்டவலம் பேரூராட்சி அதிமுக கவுன்சிலர் ஜான் விக்டருக்கு ஆயுள் தண்டனை விதித்து மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கூலித் தொகை கொடுக்கல் வாங்கலில் 2013ம் ஆண்டு பால்ராஜ் என்பவர் கொலை செய்யப்பட்டார். கொலைக்கு உடந்தையாக இருந்த ஜான் விக்டரின் தாயார் மேரி ஸ்டெல்லாவுக்கு ரூ.500 அபராதம், சகோதரி விமலாவுக்கு ரூ.1000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது

# வெங்கடேசன் தான் மீண்டும் வேட்பாளர்!" அலங்காநல்லூரில் அமைச்சர் மூர்த்தி அறிவிப்பு




அலங்காநல்லூர் மார்ச். 25-

2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, மதுரை வடக்கு மாவட்டம் சோழவந்தான் தொகுதி திமுக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் அலங்காநல்லூர் கேட்டுக்கடை தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்ட அமைச்சர் பி.மூர்த்தி பேசியதாவது:

"கடந்த தேர்தலில் நாம் அனைவரும் இணைந்து உழைத்து மாபெரும் வெற்றியைப் பெற்றோம். அதேபோல், கடந்த ஐந்தாண்டுகளில் 'திராவிட மாடல்' ஆட்சியில் எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை வழங்கிய நமது முதலமைச்சர் அவர்களை மீண்டும் தமிழ்நாட்டின் சிறந்த முதல்வராகத் தேர்வு செய்ய மக்கள் தயாராகிவிட்டனர்.

வரும் தேர்தலில் சோழவந்தான் தொகுதி வேட்பாளராக மீண்டும் எம்.எல்.ஏ வெங்கடேசன் தான் நிறுத்தப்பட உள்ளார். இத்தொகுதியில் அதிகப்படியான வாக்குகள் பெற்று, தமிழ்நாட்டின் 234 தொகுதிகளிலும் உதயசூரியன் சின்னம் வெற்றி பெறச் செய்ய வேண்டும். இந்த மண்டபத்தில் நாம் ஆலோசனை நடத்தும் போதெல்லாம் அது மிகப்பெரிய வெற்றியில் முடிந்திருக்கிறது. இந்தத் தேர்தல் ஆலோசனையும் வெற்றி விழாவாகக் கொண்டாடப்படும்."

இதில் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், மாவட்ட அவைத்தலைவர் பாலசுப்ரமணியன், செயற்குழு உறுப்பினர் புதூர் சேகர், ஒன்றிய செயலாளர்கள்தன்ராஜ், பரந்தாமன் முத்தையன், அருண், ஒன்றியவை தலைவர் நடராஜன், ஒன்றிய துணைச் செயலாளர் வாவிடமருதூர் கார்த்திகேயன், ஒன்றிய பொருளாளர் சுந்தர், நகரச் செயலாளர்கள் ரகுபதி, மனோகரவேல் பாண்டியன், சத்திய பிரகாஷ். பேரூராட்சி தலைவர்கள் ரேணுகா ஈஸ்வரிகோவிந்தராஜ், சுமதிபாண்டியராஜன், பால்பாண்டி, ஜெயராமன், துணைத் தலைவர்கள் சுவாமிநாதன், வக்கீல் கார்த்திக்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் சேதுசீனிவாசன், தனுஷ்கோடி, நிர்வாகிகள் பங்களாமூர்த்தி,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சந்தனகருப்பு,சோழவந்தான் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சதீஷ், இளைஞரணி துணை அமைப்பாளர் சின்னஊர்சேரி ஆனந்த் மற்றும் நிர்வாகிகள் பன்னைகுடி பாரி ராஜயோகம், அசோக், ராஜபிரபு, பாலகிருஷ்ணன், பாண்டி,உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்..

# திமுக கூட்டணியில் விசிகவுக்கு 8 தொகுதிகள் ஒதுக்கீடு



சென்னை, மார்ச். 25-

திமுக கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு 8 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23ம் தேதி நடைபெற உள்ளது. திமுக சார்பில் கூட்டணி கட்சிகளுக்கான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை கடந்த பிப்ரவரி 22ம் தேதி தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது. இதில் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், மதிமுக, முஸ்லிம் லீக், மமக, கொமதேக கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு முடிந்துவிட்ட நிலையில், இன்று விசிக தொகுதிப் பங்கீடும் கையெழுத்தாகியுள்ளது.

அதன்படி, திமுக கூட்டணியிலுள்ள விசிகவுக்கு 8 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 2 பொதுத் தொகுதிகள், 6 தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் ஆகியோர் இன்று (மார்ச் 24) இந்த தொகுதி பங்கீட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். கடந்த முறை 6 தொகுதிகளில் போட்டியிட்ட விசிக, 4 தொகுதிகளில் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது. இந்தமுறை கூடுதல் தொகுதிகளைப் பெறுவதில் உறுதியாக இருந்த விசிக 2 தொகுதிகளை அதிகமாக பெற்றிருக்கு.

திமுக கூட்டணியில் இதுவரை காங்கிரஸுக்கு 28, விசிகவுக்கு 8, இந்திய கம்யூனிஸ்ட் 5, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 5, மதிமுக 4, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 2, மனிதநேய மக்கள் கட்சி 2, கொமதேக 2 என தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. நாளை தேமுதிகவுடன் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. மார்ச் 30ம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



# இஸ்ரேல் அணுசக்தி ஆராய்ச்சி மையம் அருகே ஈரான் ஏவுகணைத் தாக்குதல்: 160 பேர் காயம்

டெல் அவிவ், மார்ச், 25-

அமெரிக்கா, இஸ்ரேல் ஈரான் இடையிலான போர் 4வது வாரத்தை எட்டியுள்ளது. இந்நிலையில், இஸ்ரேலின் தெற்குப் பகுதியில் உள்ள டிமோனா நகரில் பெரிய அளவிலான நெருப்புக் கோளங்கள் விழுந்து வெடிக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

அணுசக்தி மையம் அமைந்துள்ள இந்தப் பகுதியில், முதல் முறையாக இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்புகளை மீறி ஈரானிய ஏவுகணைகள் ஊடுருவித் தாக்கியுள்ளன. ஈரானின் பழைய ஏவுகணைகளிடமிருந்து அணுசக்தி நகரைக் காக்கத் தவறியதை இஸ்ரேலிய ராணுவம் ஒப்புக்கொண்டுள்ளது. ஈரானின் பிரதான அணுசக்தி செறிவூட்டல் தளமான நடான்ஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்ட அதே நாளில், அதற்குப் பதிலடியாக இஸ்ரேல் மீது இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இஸ்ரேலின் தெற்கு நகரங்களான டிமோனா மற்றும் ஆராத் பகுதிகளில் ஈரான் நடத்திய தாக்குதலில் 160க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக மருத்துவக் குழுவினர் தெரிவித்துள்ளனர். குறைந்தது 2 கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளைத் தடுக்க இஸ்ரேலிய வான் பாதுகாப்புத் துறை தவறியுள்ளது.

அணுசக்தி மையத்துக்கு அருகிலுள்ள வான் பாதுகாப்பை ஈரானிய ஏவுகணைகள் ஊடுருவிய முதல் சம்பவம் இதுவாகும். சமூக வலைதளங்களில் பகிரப்பட்ட வீடியோக்களில், ஏவுகணைகள் இஸ்ரேலிய இலக்குகளைத் தாக்கும்போது பெரிய அளவிலான வெடிப்புகள் ஏற்படுவது பதிவாகியுள்ளது.

# அடுத்தடுத்து கழலும் முக்கிய 'விக்கெட்'கள்... புதுச்சேரியில் சுருங்கிப் போகிறதா அதிமுக?






புதுச்சேரி, மார்ச். 25-

தமிழகத்துக்கு முன்பே புதுச்சேரியில் ஆட்சியை பிடித்த பெருமை அதிமுகவுக்கு உண்டு. திமுகவில் இருந்து எம்ஜிஆர் விலகி 1972ல் அதிமுகவை உருவாக்கினார். தமிழகத்தில் அதிமுக ஆட்சி அமைக்கும் முன்பாகவே கடந்த 1974ல் அதிமுக காங்கிரஸ் கூட்டணி வென்று அதிமுகவைச் சேர்ந்த ராமசாமி முதல்வரானார். பெரும்பான்மை இல்லாததால், அந்த ஆட்சி 21 நாளில் கவிழ்ந்தது. பின்னர் குடியரசுத் தலைவர் ஆட்சி நடந்தது.

அதையடுத்து 1977ல் நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக வென்று, ஓராண்டு காலத்துக்கு முதல்வராக ராமசாமி பதவியில் இருந்தார். அதன்பின்பு புதுச்சேரியில் முக்கிய கட்சியாக அதிமுக வலம் வந்தது. கடந்த 2011ல் என்.ஆர்.காங்கிரஸ் உடன் கூட்டணி அமைத்த புதுச்சேரி அதிமுக, 10 இடங்களில் போட்டியிட்டு 5ல் வென்றது.

அப்போது அந்தக் கட்சிக்கு அமைச்சரவையில் இடம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தனக்குத் தேவையான 15 இடங்கள் கிடைத்து விட்டதால் ரங்கசாமி தந்திரமாக அதிமுகவை கழற்றி விட்டார். இதனால் அப்போது ஜெயலலிதா, ரங்கசாமியை கடுமையாக விமர்சித்தார். இதனால் அடுத்த தேர்தலில் தனித்தே 30 தொகுதிகளில் களம்கண்ட அதிமுக, 4 இடங்களைப் பிடித்தது.

கடந்த 2021ல் ரங்கசாமியையும் உள்ளடக்கிய தேசிய ஜனநாயகக் கூட்டணியில் 5 இடங்களில் போட்டியிட்ட அதிமுக, அனைத்திலும் தோற்றது. இந்தத் தோல்விக்குக் காரணம் பாஜக தான் என தமிழகத்தை போலவே முடிவெடுத்த புதுச்சேரி அதிமுக, 2024 மக்களவைத் தேர்தலில் தனித்தே போட்டியிட்டு மூன்றாமிடத்துக்கு தள்ளப்பட்டது. இப்போது மீண்டும் பாஜக கூட்டணிக்கே திரும்பியிருக்கிறது.

இந்தச் சூழலில் அதிமுக தனது சுய பலத்தை இழக்கத் தொடங்கியது. காரைக்காலைச் சேர்ந்த முன்னாள் அதிமுக எம்எல்ஏவான அசனா, மாநில செயலாளர் அன்பழகன் தம்பியான முன்னாள் எம்எல்ஏவான பாஸ்கர், முன்னாள் எம்எல்ஏ பெரியசாமி, முன்னாள் எம்எல்ஏ ஓம்சக்தி சேகர் என பலரும் கட்சியிலிருந்து விலகி தவெக, பாஜக, திமுக உள்ளிட்ட கட்சிகளில் ஐக்கியமாகிவிட்டனர்.

கட்சியின் புதுச்சேரி மாநில துணை செயலாளராக இருந்த முத்தியால்பேட்டை பகுதியைச் சேர்ந்த வையாபுரி மணிகண்டன் நேற்று முன்தினம் என்.ஆர்.காங்கிரஸில் இணைந்திருக்கிறார். இப்படியாக முக்கிய நபர்கள் வெளியேற புதுச்சேரியில் அதிமுக சுருங்கி போகிறது.

இம்முறை என்டிஏ கூட்டணியில் 7 தொகுதிகள் வரை கேட்கப்போவதாக அதிமுக மாநிலச் செயலாளர் அன்பழகன் தெரிவித்து வந்த நிலையில், பாஜக இரு தொகுதிகளை மட்டுமே அதிமுகவுக்கு ஒதுக்கியிருக்கிறது. இது அக்கட்சித் தொண்டர்களிடையே வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுபற்றி தொண்டர்கள் கூறுகையில், "புதுச்சேரியில் ஒரு காலத்தில் ஆட்சியில் இருந்த கட்சி அதிமுக. என்.ஆர்.காங்கிரஸ் முதல்முறை ஆட்சியை பிடிக்கவும் உறுதுணையாக இருந்தது அதிமுகதான். என்டிஏ கூட்டணியில், புதிதாக வந்த ஒரு கட்சிக்கு இரு தொகுதிகள் தந்துள்ளனர். அதே போல் பாரம்பரியமான எங்கள் கட்சிக்கும் அதையே தந்துள்ளனர்.

இது எந்த வகையில் நியாயம்? புதியவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்ற எதிர்பார்த்து இருந்தனர். பலரும் கட்சி பணி செய்த நிலையில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட முன்னாள் எம்எல்ஏக்கள் உள்ளிட்ட பலருக்கு தொகுதிகளில் சீட் கிடைக்கவில்லை" என்று தங்களின் ஆதங்கத்தை தெரிவிக்கின்றனர்.

அதே நேரத்தில், தங்கள் கட்சியின் முன்னாள் எம்எல்ஏக்கள் வரிசையாக விலகி, கட்சி கரைந்து கொண்டிருப்பதையும் அவர்கள் வேதனையுடன் குறிப்பிடுகின்றனர்.

"கட்சிக்குள் நிலவும் கோஷ்டிபூசலும் இதற்கு காரணம். ஆளாளுக்கு ஒரு திசையில் நிற்பது கட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. தற்போது உப்பளம், உருளையன்பேட்டை என இரு தொகுதிகளில் மட்டுமே வாய்ப்பு கிடைத்துள்ளது அதிர்ச்சி தருகிறது" என்று வருத்தத்துடன் தெரிவிக்கின்றனர்.



# நாங்குநேரியில் மின்னிய குட்டி நட்சத்திரங்கள்! அரசுப் பள்ளி ஆண்டு விழா கோலாகலம்

திருநெல்வேலி, மார்ச். 25-

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் ஆண்டு விழா மிகுந்த உற்சாகத்துடன் மற்றும் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட கவுன்சிலர் வழக்கறிஞர் ஞிசி கிருஷ்ணவேணி சின்னத்துரை தலைமை தாங்கி கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். முனஞ்சிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் இசக்கிதுரை முன்னிலை வகித்தார்.

பள்ளியின் தலைமை ஆசிரியர் க.ரோஸ் சுதா வரவேற்புரை வழங்கினார். நிகழ்ச்சியில். சிலுவை, ஜஸ்டின், பிளமின், துரை, நிதின் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

விழாவில் மாணவர்களின் கலாச்சார நிகழ்ச்சிகள் அனைவரையும் கவர்ந்தன. கல்வி, விளையாட்டு மற்றும் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

மேலும், பள்ளி ஆசிரியர்கள், முன்னாள் மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் பெருமளவில் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். இவ்விழா மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் மேடையாக அமைந்தது.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதி எண். 90 அம்மாப்பேட்டை மண்டலத்தில் உள்ள பச்சப்பட்டி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்தில், அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளதா என தேர்தல் பொது பார்வையாளர் சுகவீர் சைனி, இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் தேர்தல் நடத்தும் அலுவலரும் ஆணையாளர் டாக்டர். மா.இளங்கோவன் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



■ திமுக இளைஞர் அணி திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்ட மாநகர, ஒன்றிய,நகர, பகுதி பேரூர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் ஆலோசனை கூட்டம், திண்டுக்கல்லில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.




# புளியங்குடியில் கர்ஜித்த சிங்கங்கள்! லயன்ஸ் மாவட்ட ஆளுநர் வருகை சேவைத் திட்டங்கள் குறித்து ஆலோசனை

புளியங்குடி மார்ச் 25

புளியங்குடி லயன்ஸ் கிளப் வரலாற்றில் மற்றுமொரு மைல்கல்லாக, மாவட்ட ஆளுநரின் வருடாந்திர வருகை விழா (District Governor's Annual Visit) கடந்த ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 22) புளியங்குடியில் உள்ள லயன்ஸ் ஹாலில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவிற்கு லயன்ஸ் மாவட்ட ஆளுநர் லயன். டாக்டர் எச். ஷாஜஹான் PMJF தலைமை தாங்கிச் சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில், "லயன்ஸ் அமைப்பின் தற்போதைய செயல்பாடுகள் திருப்திகரமாக உள்ளன. வருங்காலத்தில் இன்னும் அதிகப்படியான மக்கள் நலத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்" என்று விரிவாக எடுத்துரைத்தார். மாவட்டத்தின் முதல் சிங்கப் பெண்மணி சிங்கம். எம்.ஜே.எஃப். எஸ்.ஜன்னத் ஃபிர்தோஸ் முன்னிலை வகித்து விழாவினைச் சிறப்பித்தார்.

லயன்ஸ் அமைப்பின் உயர்மட்டப் பொறுப்பாளர்களான முதலாம் மாவட்ட துணை ஆளுநர் லயன். Y. வெற்றிச் செல்வன், இரண்டாம் மாவட்ட துணை ஆளுநர் லயன். டாக்டர் கே.பி. ஜான் சுபாஷ், அமைச்சரவை செயலாளர்கள் லயன். S. நல்லசிவம் பிள்ளை, லயன். டாக்டர் ஜே. பிபின், பொருளாளர் லயன். டாக்டர் ஜே. பிரேம்குமார் மற்றும் மண்டலத் தலைவர் லயன். அட்வ. எம்.சி. ராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு வாழ்த்துரைகளை வழங்கினர்.

விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும், தலைவர் சிங்கம், மு.சங்கரநாராயணன், செயலாளர் சிங்கம். பி.சக்கரவர்த்தி, பொருளாளர் சிங்கம். சி.முனீஸ்வரன் புளியங்குடி லயன்ஸ் கிளப் நிர்வாகிகள் மிகத் துல்லியமாகச் செய்திருந்தனர்.

லயன்ஸ் கிளப் உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் திரளாகக் கலந்துகொண்ட இந்த விழா, ஒரு குடும்ப சங்கமம் போலக் காட்சியளித்தது. "சேவை செய்வதில் மகிழ்ச்சி" என்ற உயரிய லட்சியத்துடன், இனிதே விழா நிறைவுற்றது.



■ திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளையில் அமைந்துள்ள ஜெயராஜேஷ் மெட்ரிகுலேஷன் பள்ளியில் (Jeyarajesh Matriculation School) இன்று 'விலங்குகள் தின' (Animal Day) நிகழ்ச்சி மிகச் சிறப்பாகவும், உற்சாகத்துடனும் நடைபெற்றது. விழாவின் தொடக்கமாக எல்.கே.ஜி மற்றும் யு.கே.ஜி (KG) வகுப்பு மாணவர்களின் சிறப்பு அசெம்பிளி நடைபெற்றது. இதில் விலங்குகளின் முக்கியத்துவம் மற்றும் அவற்றைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்து மழலையர்கள் தங்களின் மழலை மொழியில் எடுத்துரைத்தனர்.



■ புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு பல்வேறு பணிகள் நடைபெற்று வரும் நிலையில் ஆட்சியரும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான குலோத்துங்கன் அ, இ ஆ ப அவர்கள் புதுவையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தினை (Control Room) இன்று செவ்வாய்க்கிழமை சென்று ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும் 1950, C-Vigil , பறக்கும் படை., Voters ஹெல்ப்லைன் போன்ற செயலிகள் மூலம் இங்கு பெறப்படும் புகார்கள் குறித்தும் அதனை கையாளும் விதங்கள் குறித்தும் கேட்டறிந்த மாவட்ட தேர்தல் அதிகாரி அவர்கள் இதுவரை எத்தனை புகார்கள் பெறப்பட்டன என்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக விவாதித்தார்கள். மேலும் எல்லைப் பகுதி சோதனைச் சாவடிகளில் அமைந்துள்ள சிசிடிவி கேமராக்களின் கண்காணிப்பு மற்றும் செயல்பாடுகளையும் பார்வையிட்ட ஆட்சியர் எல்லைப் பகுதிகளில் தீவிர கண்காணிப்பில் பணியாற்றும் படியும் மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு, கவனமுடன் கண்காணிக்க வேண்டும் எனவும், தேர்தல் ஆணையத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு தங்கள் பணிகளை தொடர வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்கள்.



# அலைச்சலுக்கு முற்றுப்புள்ளி! புதுச்சேரியில் தேர்தல் அனுமதி பெற 'சிங்கிள் விண்டோ' சிஸ்டம்

## ஆட்சியர் குலோத்துங்கன் நேரில் ஆய்வு

புதுச்சேரி மார்ச். 25-

2026 புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் பல்வேறு அனுமதிகளை எளிதாகப் பெறும் வகையில், தேர்தல் துறை சார்பில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*ஒற்றைச் சாளர முறை (Single Window Clearance):*

அரசியல் கூட்டங்கள், ஊர்வலங்கள் மற்றும் வாகனப் பயன்பாட்டிற்கான அனுமதிகளைப் பெற ஒவ்வொரு அலுவலகமாக ஏறி இறங்கும் சிரமத்தைத் தவிர்க்க, சாரம் பகுதியில் உள்ள திட்டம் மற்றும் ஆராய்ச்சி அலுவலகத்தில் (பழைய ஆட்சியர் அலுவலகம்) 'ஒற்றைச் சாளர முறை' அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

*ஆய்வு செய்த ஆட்சியர்:*

இந்த அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்த மாவட்ட தேர்தல் அதிகாரி குலோத்துங்கன் அ, இ.ஆ.ப., அங்கு நடைபெற்று வரும் பணிகளைத் தீவிரமாக ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது தேர்தல் அதிகாரி வழங்கிய முக்கிய உத்தரவுகள்: விரைவான அனுமதி: பெறப்படும் விண்ணப்பங்களை முன்னுரிமை (First-come, first-served) அடிப்படையில் ஆய்வு செய்து, யாரையும் காக்க வைக்காமல் உடனுக்குடன் அனுமதி வழங்க வேண்டும்.

அடிப்படை வசதிகள்: அனுமதி கோரி வரும் அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்கள் அமருவதற்குப் போதுமான இருக்கைகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகளை உறுதி செய்ய வேண்டும்.

கணக்கெடுப்பு: இதுவரை எத்தனை மனுக்கள் வந்துள்ளன, அதில் எத்தனை பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்த விவரங்களை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.




■ தேனி காய்கறி சிற்பக் கண்காட்சி தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, தேனி மாவட்டம், தேனிஅல்லிநகரம் நகராட்சி உழவர் சந்தையில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறையின் சார்பில், 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக காய்கறிகள் மற்றும் பழங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட சிற்பக் கண்காட்சியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., பார்வையிட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000